**தலைப்பு 301 – கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 301 - கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூலை 09 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

## 2.1 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 03 செலவின விடயங்களுக்கான மொத்த தேறிய நிதிஏற்பாடும் 07 செலவின விடயங்களுக்கான தேறிய நிதிஏற்பாட்டில் 30 சதவீதம் முதல் 92 சதவீதம் வரையிலான வீச்சிலும் சேமிப்பு காணப்பட்டமை நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் இயலுமான வரை சாத்தியமானதாகவும் சரியாகவும் மதிப்பீடு தயாரிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | தேசிய வரவு செலவு திட்ட சுற்றறிக்கை 1/2023 இன் பிரகாரம் செலவினங்களை வரையறுத்தலும் நிதிஏற்பாட்டை சேமிப்பதற்கு காரணமாக இருந்ததுடன், 2025 ஆம் ஆண்டில் மதிப்பீடு தயாரிக்கும் போது சரியாக சமர்ப்பிப்பதற்கும், 2024 ஆம் ஆண்டின் போது ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டை குறித்துரைத்த பிரகாரம் பயன்படுத்துவதற்கும் உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சாத்தியமான மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதி ஏற்பாட்டை சேமிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்டதன் காரணமாக ஏற்றுக் கொள்ள முடியாத 06 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன், கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தில் இருந்து செலவினங்கள் செய்யப்பட்டமையினால் வெளிநாட்டு பிரயாண செலவின விடயத்தில் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டமை மற்றும் ஏனைய செலவின விடயங்களில் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது கணிசமான அளவில் நிதி ஏற்பாடு அதிகரிக்கப்பட்டமை இவ்வாறு சேமிப்பு ஏற்படுவதற்கு காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை 1/2023 இன் பிரகாரம் செலவினங்களை வரையறுப்பதற்கும், நிதிஏற்பாட்டை சேமிப்பதற்கு காரணமாக இருந்தவை மற்றும் எதிர்வரும் ஆண்டுகளின் சரியாக மதிப்பீட்டை தயாரிப்பதற்கும் உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சாத்தியமான மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக் கூற்றில் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் 02 செலவின விடயங்களுக்குரிய பொறுப்புக்கள் ரூபா 171,608 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரியாக சமர்ப்பிப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | செலவின விடயத்திற்கான நிதிஏற்பாட்டின் சேமிப்பு ரூபா 1,534,479 ஆக இருந்ததுடன் பொறுப்புக்கள் ரூபா 1,642,997 ஆனமையால் நிதி ஏற்பாட்டை விஞ்சி பொறுப்புக்கள் ரூபா 108,518 ஆக இருந்தது. | செலவின விடயம் 1403 இன் கீழ் அறவிடப்படுகின்ற வீதம் உயர்வடைந்து சென்றதன் காரணமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டின் அளவு போதியளவில் இல்லாமையின் அடிப்படையில் நிதி ஏற்பாட்டை விஞ்சி இருந்தது. | நிதி ஏற்பாட்டை விஞ்சி பொறுப்புக்களில் ஈடுபட முடியாது. |

**2.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்கங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் பயன்பாடு**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்தின் இரண்டாவது கட்டத்தின் கீழ் அரிசி 1249.5 மெற்றிக் டொன் 7917 பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகளின் போது உணவு திணைக்களம் களஞ்சியங்களில் இருந்து 09 மாகாணங்களின் பல்நோக்கு கூட்டுறவு சங்கங்களுக்கு பகிர்ந்தலிப்பதற்கு இலங்கை கூட்டுறவு விற்பனை சங்கம் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன், பாடசாலைகளுக்காக பகிர்ந்தளித்தல் பல்நோக்கு கூட்டுறவு சங்கங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) 09 மாகாணங்களின் பாடசாலைகளுக்காக அரிசி கிலோ கிராம் 1,247,475 பகிந்தலிப்பதற்காக ரூபா 18,712,125 செலுத்தப்பட்டிருந்த போதிலும், விற்பனை சங்கத்தினால் பல்நோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு பகிந்தளிக்கப்பட்ட அரிசியின் அளவு கிலோ கிராம் 1,233,225 மாத்திரம் ஆகும். | பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக விற்பனை சங்கத்தின் மூலம் உணவு ஆணையாளர் களஞ்சியங்களில் இருந்து அரிசி கிலோ கிராம் 1,249,450 கையேற்கப்பட்டுள்ளது. மாகாணத்தில் பகிர்ந்தலிப்பதற்கு பல்நோக்கு கூட்டுறவு சங்கங்களுக்கு 1,233,255Kg வழங்கப்பட்டுள்ளது. | நிதிஏற்பாட்டை செயற்திறனாக பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மேற்கூறப்பட்ட பகிர்ந்தளித்தல் செலவினங்களுக்கு மேலதிகமாக 08 மாகாணங்களுக்காக நிர்வாக செலவினமாக ரூபா 800,000 மற்றும் மத்திய மாகாண மாவட்டத்தில் 03 பிரதான சங்கங்களுக்கு வழங்கப்பட்ட அரிசி அந்த சங்கங்களில் ஏனைய சங்கங்களுக்கு பகிர்ந்தளிக்கும் செலவினமாக ரூபா 596,166 தொகையும் ஆக மாகாண பல்நோக்கு கூட்டுறவு சங்கங்களுக்கு ரூபா 1,396,166 மேலதிக செலவினம் செலுத்தப்பட்டிருந்தது. | மாகாணத்தின் மூலம் அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரகாரம் நிர்வாக செலவினங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், மத்திய மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தால் பெயர் குறிப்பிடப்பட்ட களஞ்சிய வசதிகள் காணப்படுகின்ற 03 சங்கங்களால் பாடசாலைகளுக்கு அரிசி பகிர்ந்தளிப்பதற்காக ஏனைய கூட்டுறவு சங்கங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. | நிதிஏற்பாட்டை செயற்திறனாக பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | சீன மக்கள் குடியரசின் மூலம் அரசாங்கத்திற்கு மானியம் கையளிப்பதற்காக கொழும்பு துறைமுகத்திற்கு தரையிறக்கப்பட்ட மெற்றிக் டொன் 5000 ஆன இரண்டாவது அரிசி இருப்பு துறைமுகத்தில் இருந்து விடுவித்தல் மற்றும் பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கும் பணிகள் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்திற்கு கையளித்து கல்வி அமைச்சு 2022 திசெம்பர் 20 ஆம் திகதி புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தது. அதன் போது பகிரங்க கூறுவிலை கோராமல் தனியார் நிறுவனத்திற்கு விடுவிக்கும் நடவடிக்கைகள் கையளித்து அரிசி மெற்றிக்டொன் 3000 அளவு | | |

| | | | |
|---|---|---|---|
| | விடுவிக்கப்பட்டதன் பின்னர் எஞ்சிய மெற்றிக் டொன் 2000 அளவு விடுவிப்பதற்காக பகிரங்க அறிவித்தல் பத்திரைகளை பிரசுரித்து அதன் பிரகாரம் இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் தெரிவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | தனியார் நிறுவனத்தால் விடுவிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட அரிசி மெற்றிக் டொன் 3000 இற்காக அந்த நிறுவனத்திற்கு ரூபா 10,309,522 தொகை செலுத்தப்பட்ட போதிலும், நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலை ரூபா 9,038,960 ஆனமையால் ரூபா 1,270,562 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | தொழிலாளர் கூலி மற்றும் கொள்கலன் போக்குவரத்து கூலி மாத்திரம் கையளித்தல் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், முகவர் கட்டணம், சுங்க ஆவண கட்டணங்கள் போன்ற ஏனைய கட்டணங்களுக்காக கூறு விலை சமர்ப்பித்து கையளிக்கப்படாமையினால் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தால் செலவிட வேண்டியிருந்தமையால் அதன் பிரகாரம் கொடுப்பனவுகள் சரியானதாகும். | சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | அரிசி மெற்றிக் டொன் 2000 விடுவிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 7,501,666 தொகை செலுத்தப்பட்ட போதிலும், கூட்டுத்தாபனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட விலை ரூபா 6,051,300 ஆனமையால் அந்த தொகையை விஞ்சி ரூபா 1,450,366 செலுத்தப்பட்டிருந்தது. | ரூபா 5,262,000 தொகையில் கேள்வி கையளிக்கப்பட்டதுடன், அந்த தொகை மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட்டது. ஏனைய கொடுப்பனவுகள் ஆன திணைக்களத்தால் செலுத்த வேண்டிய நியதிச் சட்ட கொடுப்பனவுகள் ஆக இருந்ததுடன், வ.்.ப இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தால் திணைக்களத்திற்காக செலுத்தப்பட்டு எங்களிடம் இருந்து மீளளிப்பு | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | | செய்யப்பட்ட செலவினம் ஆனமையால் கொடுப்பனவு சரியானதாகும். | |
| (இ) | வெளிநாட்டு உதவி மற்றும் மானியத்தின் கீழ் கல்வி அமைச்சுக்கு கிடைத்த பாடசாலை சீருடைத் துணிகள் விடுவிக்கும் நடவடிக்கைகள் மற்றும் பகிர்ந்தளிப்பதற்காக 2022 ஒக்டோபர் 18 ஆம் திகதிய இலக்கம் அமப/22/1540/607/005-1 என்ற அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு விடுவித்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | விடுவிப்பதற்குரிய கல்வி அமைச்சு மற்றும் திணைக்களத்திற்கு இடையே கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி சீருடைகளை விடுவிப்பதகாக ரூபா 8,600,000 தொகை அமைச்சில் இருந்து கிடைத்திருந்தது. எனினும், உள்ளபடியான செலவினம் ரூபா 12,276,160 ஆனமையால் ரூபா 3,676,160 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்த போதிலும், மேலதிக செலவினங்களுரிய அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளல் மற்றும் மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகை | மேலதிக செலவினங்களுக்கு அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக கல்வி அமைச்சுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக செலவிடப்பட்ட தொகை இது வரை செலுத்தப்படவில்லை. | மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகை அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கல்வி அமைச்சில் இருந்து அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவிவ்லை. | | |
| (ii) | இரண்டாவது தடவை கிடைத்த சீருடை இருப்பின் விடுவிக்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யபபட்டு களுஞ்சியத்திற்கு கையளிக்கப்பட்டு 2023 மார்ச் 19 ஆம் திகதி தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், கப்பல் கூட்டுத்தாபனத்தால் விடுவித்தல் நடவடிக்கைகள் தாமதம் அடைந்ததன் காரணமாக திணைக்களத்திற்கு ரூபா 1,890,700 மேலதிக தொகையை செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | கப்பல் கூட்டுத்தாபனத்திற்கு மேலும் செலுத்த வேண்டிய ரூபா 6,879,066.55 தொகை கிடைத்த பின்னர் மேலதிக செலவான ரூபா 1,890,700 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | பாடசாலை சீருடைகளை களஞ்சியப்படுத்தல் மற்றும் பகிர்ந்தளிப்பதற்கு இணங்கிய மதிப்பீடு ரூபா 40 மில்லியன் ஆக இருந்ததுடன், உள்ளபடியாக செலவிடப்பட்ட செலவினம் ரூபா 41,930,750 ஆனமையால் ரூபா 1,930,750 மேலதிக செலவினம் ஒன்று செய்யப்பட்டிருந்தது. மேலதிக செலவினத்திற்கான அங்கீகாரம் பெறப்படாதிருந்ததுடன், கல்வி அமைச்சில் இருந்து மேலதிக செலவினம் கோரப்பட்ட போதும், அந்த தொகை திணைக்களத்திற்கு கிடைத்திருக்கவில்லை. | மேலதிக செலவான ரூபா 1,930,749.96 தொகைக்காக அங்கீகாரம் கோரி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.4 வைப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இழப்பீடு செலுத்துவதற்காக பொது வைப்புக் கணக்கில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட 105 வைப்பு மீதிகளின் பெறுமதி ரூபா 2,056,432 ஆகும். அந்த மீதிகள் 08 வருடங்களை விட பழையதாக இருந்ததுடன், நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் 02 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய மீதிகளை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், அவ்வாறு நடவடிக்கை எடுக்காமைக்கான காரணமாக நீதிமன்றங்களில் காணப்படுகின்ற வழக்குகள் முடிவடையாதிருந்ததாக வைப்பு கணக்கு இணக்கக் கூற்றில் காண்பிக்கப்பட்ட போதிலும், அந்த சகல மீதிகள் தொடர்பாகவும் முடிவுறாத வழக்குகளாக இருந்தமை உறுதிப்படுத்தப்பட வில்லை. | கணக்குகள் பிரிவில் காணப்படுகின்ற அடியிதழ்கள் மற்றும் சங்கங்களின் தகவல்களின் மூலம் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அபிவிருத்தி பிரிவில் 06 செயற்திட்டங்கள் திருத்தப்பட்ட செயல் நடவடிக்கை திட்டத்தில் இருந்து அகற்றப்பட்டிருந்ததுடன், பயிற்சி பிரிவிற்கான செயற்திட்டத்தின் கீழ் 04 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் 02 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. | செலவின முகாமைத்துவ சுற்றறிக்கையின் மூலம் அத்தியவசிய பயிற்சிகளுக்காக மாத்திரம் செலவினம் செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டமையால், சங்கங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு பயிற்சி சந்தாப்பங்கள் வழங்குதல் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் இருந்து நீக்கப்பட்டுள்ளது. | திட்டங்களை அமுல்படுத்துவதற்கு கண்காணித்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2023 இன் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயல் முன்னேற்றத்தை பரீட்சித்த போது அமுல்படுத்தப்படாத செயற்திட்டங்களில் செயல் முன்னேற்றம் காண்பிக்கப்பட்டிருந்தது. செயல் முன்னேற்றத்தை சமர்ப்பிக்கும் போது செயற்பாடுகளின் எண்ணிக்கை மற்றும் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகளின் எண்ணிக்கை ஆக ஒப்பீட்டு ரீதியாக காண்பிக்கப்பட்டமையால் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் என்ன என்பது என தெளிவாக உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | கல்வி அமைச்சு இந்த திணைக்களத்துடன் ஒன்றிணைந்து மேற்கொண்டு செயற்திட்டங்களின் காரணமாக அதன் செயல் முன்னேற்றம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் 2024 ஆம் ஆண்டில் விரிவான தகவல்கள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செயல் முன்னேற்றங்களை விரிவாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டிற்காக இயந்திர பொறியியலாளரால் திணைக்களத்தின் சகல மோட்டார் வாகனங்களும் ரூபா 52,555,000 பெறுமதியில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரம் மோட்டார் வாகனங்களின் பெறுமதி ரூபா 37,025,000 ஆனமையால் ரூபா 15,530,000 வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன், மதிப்பீட்டு பெறுமதி திணைக்கள புத்தகங்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் பெறுமதி உயர்வடைந்து சென்றதன் காரணமாக புத்தகங்களில் குறிப்பிடப்பட்ட பெறுமதியை விட வாகனங்களின் மதிப்பீட்டு பெறுமதி உயர்வடைந்து காணப்பட்டது. | மதிப்பீட்டு பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

**3.3 நட்டம் மற்றும் இழப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 04 வாகன விபத்துக்கள் ஏற்பட்டிருந்த போதிலும், அது தொடர்பான நட்டம் மற்றும் கைவிடல்கள் தொடர்பான கூற்றில் அறிக்கையிடப்படவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | வாகன விபத்துக்களை அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.4 முகாமைத்துவ நலிவுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 ஆகஸ்ட் 05 ஆம் திகதி நடைபெற்ற அரசாங்கக் கணக்குக் குழு கூட்டத்தின் போது வழங்கப்பட்ட கட்டளை மற்றும் கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) 2013 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட நிதி சேவை சங்கங்கள் தொடர்பகா தகவல்கள் சேகரித்தல் மற்றும் நாளது வரையாக்குவதற்கு தகவல் வங்கியொன்றை ஆரம்பிக்கும் பணிகளுக்ககாக ரூபா 5,920,186 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், உரிய தரவு முறைமையொன்று திணைக்களத்திடம் காணப்படாதிருந்தமை அரசாங்கக் கணக்குக் குழுவின் கவனத்திற்கு உட்பட்டிருந்த போதிலும், 2023 திசெம்பர் வரையிலும் 10 வருடங்கள் கடந்திருந்த போதும், தரவு வங்கியை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உத்தேசிக்கப்பட்ட கணனி வலைப்பின்னல் நிகழ்ச்சித் திட்டம், இலங்கையில் சகல நிதிச் சேவை கூட்டுறவு சங்கங்களுக்காகவும் பொருத்தமான பிரகாரம் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வ/ப இலங்கை தேசிய கூட்டுறவு சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், இதன் முதலாவது கட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட செயற்திட்டம் தம்பதெனிய பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தின் சகல கிராமிய வங்கி கிளைகளுக்காகவும் அமுல்படுத்தப்படுகின்றது. | தரவு வங்கியை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | பாடசாலை பாடப் புத்தகங்களை உள்ளடக்கிய கூட்டுறவு பாட பரப்பை விரிவுபடுத்துவதற்காக ரூபா 304,916 செலவினம் ஒன்று செய்யப்பட்டிருந்ததுடன், அந்தந்த தரங்களுக்காக உள்ளடக்க வேண்டிய பாட பகுதிகள் இனங்கண்டு அறிக்கையொன்று 2021 திசெம்பர் 17 ஆம் திகதி தயாரிக்கப்பட்டிருந்தது. அறிக்கை தயாரித்து தற்போது இரண்டு வருடங்கள் கடந்திருந்த போதிலும், கணக்காய்வு திகதி வரையிலும் அந்த பாட விடயங்கள் பாடசாலை பாட பரிந்துரையில் உள்ளடக்கப் படாதிருந்தமையால் செலவிடப்பட்ட ரூபா 304,916 பயனற்ற செலவினமாக அவதானிக்கப்பட்டது. | 2023 ஆம் ஆண்டில் புதிய பாட பரிந்துரை தயாரிக்கும் போது பாடப் புத்தகங்களில் உள்ளடக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | செலவினங்கள் சரியாக முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும். |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 40 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உள்ளக கணக்காய்வு அலகொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்க வில்லை. | உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை நியமிப்பதற்காக அரசாங்க நிர்வாகத்திடம் கோரப்பட்ட போதும், இது வரை உத்தியோகத்தர் ஒருவர் பெயரிடப்படாதிருந்ததுடன், பதவியணியினரில் காணப்படுகின்ற வெற்றிடங்களின் காரணமாக உள்ளக கணக்காய்வு அலகை ஸ்தாபிப்பதற்கு முடியாதிருந்தது. | கணக்காய்வு அதிகார சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |